பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 652 **நாள் : 05.11.2026**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை விதிமுறைகளை முறையாகப் பின்பற்றாத 126 பெருமளவு கழிவுகள் உருவாக்குபவர்களிடமிருந்து அபராதமாக ரூ. 6,30,000/- இன்று வசூலிக்கப்பட்டது.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

பெருநகர சென்னை மாநகராட்சியின், ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, திடக்கழிவு மேலாண்மை விதிமுறைகளை முறையாகப் பின்பற்றுவதை உறுதி செய்யும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 1 முதல் 15 வரையிலான மண்டலங்களிலும் உள்ள வணிகப் பயன்பாட்டைச் சார்ந்த பெருமளவு கழிவு உருவாக்குபவர்களிடம் (Commercial Bulk Waste Generators) இன்று (05.11.2026) சிறப்பு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களில், 12 மண்டலங்களில் தனியார் நிறுவனங்கள் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 3 மண்டலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் நேரடியாகத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

01.04.2026 முதல், பெருமளவு கழிவுகளை உருவாக்குவோரால் (Bulk Waste Generators) உருவாக்கப்படும் கழிவுகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் இலவசமாகச் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

பெருமளவு கழிவு உருவாக்குவோர், திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-ஐ முறையாகப் பின்பற்றி, தங்களால் உருவாக்கப்படும் கழிவுகளின் அளவிற்கு ஏற்ப போதிய கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டிகளைத் தங்களது வளாகத்திற்கு வெளியே உரிய இடத்தில் வைக்க வேண்டும். மேலும், கழிவுகள் உருவாகும் இடத்திலேயே நான்கு வகைகளாக முறையாகத் தரம் பிரிக்கப்பட்டு, அதற்கென ஒதுக்கப்பட்ட குப்பைத் தொட்டிகளில் தனித்தனியாகச் சேகரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளைப் பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் மூலம் எவ்விதக் கட்டணமும் இன்றி சேகரித்து எடுத்துச் செல்லும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருமளவு கழிவு உருவாக்குவோருக்கு (Bulk Waste Generators - BWGs) மேற்கண்ட விதிமுறைகளைப் பின்பற்றுவதற்காக 6 மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தும், பெரும்பாலானோர் தங்களால் உருவாக்கப்படும் கழிவுகளை நான்கு வகைகளாக முறையாகத் தரம் பிரித்து மாநகராட்சியிடம் ஒப்படைப்பதில்லை. மேலும், தங்களது வளாகங்களில் உருவாகும் கழிவுகளின் அளவிற்கு ஏற்ப போதிய கொள்ளளவு கொண்ட, வண்ணக் குறியீடுகளுடன் கூடிய குப்பைத் தொட்டிகளைக் கொள்முதல் செய்து நிறுவிப் பராமரிக்காமலும் உள்ளனர். இதன் காரணமாக, திடக்கழிவு மேலாண்மை விதிமுறைகளை முழுமையாகச் செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்படுவதுடன், கழிவுகளை முறையாகச் சேகரித்து கையாள்வதிலும் நடைமுறைச் சிக்கல்கள் நிலவி வருகின்றன.

எனவே, மாநகராட்சி ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (05.11.2026) இச்சிறப்பு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது, இச்சிறப்பு கள ஆய்வில், வட்டாரத் துணை ஆணையர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பங்கேற்றனர்.

இச்சிறப்பு கள ஆய்வின்போது, கீழ்காணும் அம்சங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1. **கழிவுகளைத் தரம் பிரித்தல்:** கழிவுகள் உருவாகும் இடத்திலேயே நான்கு வகைகளாக முறையாகத் தரம் பிரிக்கப்படுகின்றனவா என்பது ஆய்வு செய்யப்பட்டது.
2. **வண்ணக் குறியீடுகளுடன் கூடிய குப்பைத் தொட்டிகள்:** உரிய கொள்ளளவு கொண்ட, வண்ணக் குறியீடுகளுடன் கூடிய குப்பைத் தொட்டிகள் போதுமான அளவில் வைக்கப்பட்டு, முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்பது ஆய்வு செய்யப்பட்டது.
3. **கழிவுகளைச் சேமித்தல் மற்றும் கையாளுதல்:** தரம் பிரிக்கப்பட்ட கழிவுகள் வளாகத்திற்குள் முறையாகச் சேமிக்கப்பட்டு, உரிய பாதுகாப்பு மற்றும் சுகாதார முறைகளின்படி கையாளப்படுகின்றனவா என்பது சரிபார்க்கப்பட்டது.
4. **CPCB மையப்படுத்தப்பட்ட இணையதளப் பதிவு:** பெருமளவு கழிவு உருவாக்குவோர் (BWGs), மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) மையப்படுத்தப்பட்ட இணையதளத்தில் (Centralized Portal) பதிவு செய்துள்ளனரா என்பது சரிபார்க்கப்பட்டது.
5. **தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை ஒப்படைத்தல்:** தரம் பிரிக்கப்பட்ட கழிவுகள் அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சியிடம் முறையாக ஒப்படைக்கப்படுகின்றனவா என்பது உறுதி செய்யப்பட்டது.

இச்சிறப்பு கள ஆய்வின்போது, **260 எண்ணிக்கையிலான பெருமளவு கழிவுகள் உருவாக்குபவர்களிடம்** ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில், திடக்கழிவு மேலாண்மை விதிமுறைகளை முறையாகப் பின்பற்றாத **126 எண்ணிக்கையிலான பெருமளவு கழிவுகள் உருவாக்குபவர்களிடமிருந்து அபராதமாக ரூ. 6,30,000/- வசூலிக்கப்பட்டது.**

மேலும், வணிக நிறுவனங்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள், வணிக வளாகங்கள், திருமண மண்டபங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள் உள்ளிட்ட பெருமளவு கழிவுகளை உருவாக்கும் அனைத்து நிறுவனங்களும் கழிவுகளை உருவாகும் இடத்திலேயே முறையாகத் தரம் பிரித்து, அறிவியல் பூர்வமான கழிவு மேலாண்மை நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவுறுத்தியுள்ளது.

கழிவுகளை முறையாகத் தரம் பிரித்தல், வளாகத்திலேயே கழிவுகளைச் செயலாக்குதல், திடக்கழிவு மேலாண்மை விதிகளை முறையாக பின்பற்றுதல் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க ஆகியவற்றை உறுதி செய்து, தூய்மையான, சுகாதாரமான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சென்னை மாநகரத்தை உருவாக்க அனைத்து பெருமளவு கழிவு உருவாக்குவோரும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறும் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, குப்பைகளைத் தரம் பிரித்து வழங்கி அபராதத்தைத் தவிர்த்திடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்
பெருநகர சென்னை மாநகராட்சி

GREATER CHENNAI CORPORATION

PRESS RELEASE

PR.No.: 652 **Date: 05.11.2026**

A fine of Rs. 6,30,000/- collected today from 126 Bulk Waste Generators in GreaterChennai Corporation areas for failing to properly follow Solid Waste Management Regulations.

Greater Chennai Corporation Commissioner Dr. G.S. Sameeran, I.A.S., instructions, a special field inspection was conducted today (05.11.2026) across all 15 zones (Zones 1 to 15) of Greater Chennai Corporation. The drive targeted Commercial Bulk Waste Generators to ensure strict adherence to Solid Waste Management regulations.

Out of the 15 zones in Greater Chennai Corporation, solid waste management and sanitation works in 12 zones are being carried out through private agencies. In the remaining 3 zones, sanitation works are executed directly by the Greater Chennai Corporation.

Since April 1, 2026, waste generated by Bulk Waste Generators (BWGs) is being collected by the Greater Chennai Corporation free of charge.

As per the Solid Waste Management Rules, 2026, Bulk Waste Generators must place waste bins of adequate capacity outside their premises in designated locations. Furthermore, waste must be segregated into four distinct categories at the point of generation and collected separately in designated bins.

The waste segregated in this manner is being collected and transported free of cost by the sanitation personnel of Greater Chennai Corporation. Although a 6-month grace period was provided to Bulk Waste Generators (BWGs) to comply with these rules, most generators still fail to segregate their waste into four categories before handing it over to the Corporation.

Additionally, many have failed to procure, install, and maintain color-coded waste bins with adequate capacity for their premises. This non-compliance creates severe operational bottlenecks in implementing solid waste management rules and handling waste systematically.

Therefore, as ordered by the Corporation Commissioner, a special field inspection was conducted today (05.11.2026). The inspection team comprised Regional Deputy Commissioners,

Superintending Engineers, Zonal Officers, Executive Engineers, Assistant Executive Engineers, Health Officers, Sanitary Inspectors, and other relevant officials.

Key Aspects Evaluated During the Special Inspection:

1. Waste Segregation: Inspected whether waste is properly segregated into four categories at the point of origin.
2. Color-Coded Bins: Verified whether color-coded waste bins of adequate capacity are installed in sufficient numbers and maintained properly.
3. Waste Storage and Handling: Checked whether segregated waste is safely stored inside premises and handled following proper safety and hygiene standards.
4. CPCB Portal Registration: Verified whether Bulk Waste Generators (BWGs) have registered on the Centralized Portal of the Central Pollution Control Board (CPCB).
5. Handover of Segregated Waste: Confirmed whether all segregated waste is systematically handed over to the Greater Chennai Corporation.

During this special field inspection, a total of 260 Bulk Waste Generators were inspected. Among them, 126 Bulk Waste Generators found non-compliant with Solid Waste Management regulations were penalized, and a fine of Rs. 6,30,000/- was collected.

Greater Chennai Corporation has advised all commercial establishments, restaurants, hotels, commercial complexes, marriage halls, educational institutions, hospitals, and all other bulk waste generating entities to systematically segregate waste at source and adopt scientific waste management practices.

All Bulk Waste Generators are requested to extend their full cooperation in creating a clean, hygienic, and eco-friendly Chennai by ensuring source segregation, processing waste within premises where applicable, complying strictly with Solid Waste Management rules, and handing over segregated waste to the Greater Chennai Corporation. Bulk waste generators are urged to hand over segregated waste as per rules and avoid penalties.

Issued By: Joint Director/Public Relations Officer

Greater Chennai Corporation.